# தேயிலை பயிர்ச்செய்கையும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார பிரச்சினைகள் : பதுளை மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு

**மோஹன்ராஜ் கிருஷ்ணஸ்ரீ[1], கிருஸ்ணகுமார் காஞ்சனா[2]**

[1]புவியியற்துறை, கலை மற்றும் கலாச்சார பீடம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

[2]புவியியற்துறை, கலை மற்றும் கலாச்சார பீடம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

*[1]mkrishnasri517@gmail.com*
*[2]krishnakumarkanchana428@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்:** *தேயிலை பயிர்ச் செய்கையானது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வணிகப் பயிராகவும், குறிப்பாக இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பிரதான மூலாதாரமுமாக காணப்படுகின்றது. மேலும் இலங்கையானது தேயிலை பயிர்ச்செய்கை மூலமே ஆண்டு ஒன்றிற்கு 1.3 பில்லியன் டொலருக்கும் அதிகமான வருமானத்தை பெற்றுக் கொள்கின்றது. இவ்வாறு பல வழிகளிலும் இலங்கையின் பொருளாதாரத்திற்கு துணை புரிந்த தேயிலை உற்பத்தியின் முதுகெலும்புகளான தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார பிரச்சனைகளானது ஆரம்பகாலம் முதல் இன்றைய காலம் வரை மிகவும் மோசமான நிலையிலேயே காணப்படுகின்றது. அந்த வகையில் பெருந்தோட்டங்களின் அமைவிடங்களில் ஒன்றான பதுளை மாவட்டத்தின் தோட்டப்புறங்களில் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் இன்மை, சுகாதார இடர்கள், குறைந்த கல்வி வசதி, காணி உரிமை இன்மை, லயன் குடியிருப்புகள் போன்ற பல சமூக பொருளாதார பிரச்சினைகள் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த வகையில் இவ்வாய்வின் பிரதான நோக்கமாக பதுளை மாவட்டத்திற்கு உட்பட்ட தோட்டப்புறங்களில் வாழும் தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரச் சவால்களை அடையாளங்காணலும் துணை நோக்கங்களாக தோட்டத்தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரச் சவால்கள் ஏற்படுவதற்கான காரணங்களை அடையாளம் காணல், தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரச் சவால்களை தீர்ப்பதற்கான வாய்ப்புக்களை இணங்காணுதல் மற்றும் தீர்வுகள், பரிந்துரைகளை முன்வைத்தல் என்பன காணப்படுகின்றன. மேலும் இவ்வாய்வுக்காக முதலாம் நிலை தரவுகளான கள ஆய்வு, நேர்முகம் காணல், நேரடி அவதானம், வினா கொத்து என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இங்கு 186 தோட்டப்புறங்கள் காணப்படுவதனால் ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்ளும் முகமாக நோக்க மாதிரி எடுப்பு முறையின் அடிப்படையில் இவற்றில் தெரிவு செய்யப்பட்ட தோட்டப்புறங்களை மையப்படுத்தியதாக 100 கட்டமைக்கப்பட்ட வினா கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன. மேலும் இரண்டாம் நிலை தரவுகளான பிரதேச செயலக பிரிவின் அறிக்கைகள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள், ஆய்வு கட்டுரைகள், பத்திரிகைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வினை பகுப்பாய்வு செய்வதற்காக Ms Excel, Arc Gis 10.8, SPSS போன்ற மென்பொருட்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் மூலம் பதுளை மாவட்ட பெருந்தோட்ட தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற வாழ்வாதார பிரச்சனைகளாக லயன் குடியிருப்புக்கள், உட்கட்டமைப்பு விருத்தியின்மை, சுகாதார வசதிகள் இன்மை, பாதுகாப்பின்மை, சம்பளப்பிரச்சினை போன்ற பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எனவே இவ் ஆய்வின் முடிவாக வாழ்வாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து ஒவ்வொரு தொழிலாளரும் தமக்கான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக தாமே முன்வருதலின் மூலமே சிறந்த உட்கட்டமைப்பு வசதியுடனும் எழுச்சி மிகுந்ததும் மாற்றமடைந்து வரக்கூடியதுமான ஒரு மலையக சமூகத்தை உருவாக்கக் கூடியதாக இருக்கும்.*

**திறவுச் சொற்கள்** : தோட்டதொழிலாளர்கள், பெருந்தோட்டம், தேயிலைப்பயிர்ச்செய்கை, வாழ்வாதார பிரச்சினைகள், பொருளாதாரம்

## 1. அறிமுகம்

தேயிலை (Tea, Camellia sinensis) எனப்படுவது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த வணிகப்பயிராக காணப்படும் ஒரு பசுமை இனத்தாவரமாகும். இது தேநீர் தயாரிக்க பயன்படும் ஒரு முக்கிய மூலப்பொருளாக காணப்படுவதுடன், ஆரம்ப காலத்தில் கிழக்கு, தெற்கு, தென்கிழக்கு ஆசியாவிலேயே தேயிலைப்பயிர்ச்செய்கை அதிகளவில் மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது சீனா, கென்யா, துருக்கி, இந்தனோசியா, வியட்நாம், வங்காள தேசம், மலாவி, உகண்டா, தன்சானியா, மலேசியா, இலங்கை போன்ற பல நாடுகளிலும் தேயிலை உற்பத்தியானது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு உலகளவில் பயிரிடப்படும் வர்த்தகப்பயிரான தேயிலை இலங்கையில் 1824ம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவ காலப்பகுதியில் முதன் முதலாக சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்டதாக பல வரலாற்றுச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. ஆரம்பத்தில் இலங்கையில் சிறியளவில் மேற்கொள்ளப்பட்ட தேயிலைப்பயிர்ச்செய்கையானது ஜேம்ஸ் டெய்லர் என்ற ஸ்கொட்லாந்து நாட்டவரின் முயற்சியில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கையாக உருவெடுத்து வணிகமயமானது. இலங்கையில் குறிப்பாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை போன்ற பகுதிகளிலேயே அதிகளவில் தேயிலை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஆண்டொன்றிற்கு 1.3 பில்லியன் டொலருக்கும் அதிகமான வருமானத்தை இலங்கை இந்த பெருந்தோட்டத்துறை மூலமே பெற்றுக்கொள்கின்றது. உலகளவில் அதிகம் தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் 4ம் இடத்தை பிடித்த இலங்கையானது 2019ம் ஆண்டில் அண்ணளவாக 300000 மெற்றிக் தொன் தேயிலையை உற்பத்தி செய்துள்ளது. இதன் பெறுமதி 1.5 பில்லியனுக்கும் அதிகமாக விளங்குவதோடு GDP என்று கூறப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2% பங்கை வகிக்கின்றது(மத்திய வங்கி ஆண்டறிக்கை,2019). மேலும் இப்பயிர்ச்செய்கை மூலம் கிட்டத்தட்ட 10 இலட்சம் மக்கள் வேலை வாய்ப்பு பெறுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் 2019ம் ஆண்டு மொத்த தேயிலை உற்பத்தியானது 300MKg ஆக காணப்பட்டதுடன் இவற்றில் 292.65MKg தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது. மேலும் இதன் மூலமாக 80.65 பில்லியன் ரூபா இலாபமும் கிடைக்கப்பெற்றது(மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை,2019). இவ்வாறு பல வழிகளிலும் முன்னேற்றங்களை கண்ட தேயிலைப்பயிர்ச்செய்கையானது அவற்றின் உற்பத்திக்கு வித்திட்ட தேயிலைத்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வியலை மாத்திரம் இன்னும் முன்னேற்றவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

1820 – 1840 காலப்பகுதியில் இந்தியாவின் தென் மாநிலத்தில் சாதிக்கொடுமையும் பஞ்சமும் தலைவிரித்தாடிய சூழலை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட ஆங்கிலேயர்கள் அங்கு வாழ்ந்த அப்பாவி மக்களை கூலித்தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்துவந்து சிறிய நெறிசல் மிகுந்த லயன்கள் என அழைக்கப்படும் வீடுகளிலேயே குடியமர்த்தினர். இவர்கள் காடு மேடாகவும் கல்லு முல்லாகவும் காட்சியளித்த மலைநாட்டை தமது கடின உழைப்பால் எழில் கொஞ்சும் பூமியாக மாற்றியதுடன் இலங்கையின் பொருளாதாரத்தையும் தோலில் சுமந்தனர். ஆனாலும் அவர்கள் வசிப்பதற்கு அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட லயன் அறைகளிலேயே பல தசாப்தங்களை கடந்தனர். இங்கு கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வீட்டு வசதி, மலசலக்கூடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றன. இலங்கையின் பொருளாதாரத்திற்கு உரமூட்டிய தோட்ட தொழிலாளர்கள் நாட்சம்பளம் பெறும் கைக் கூலிகள் என்ற கண்ணோட்டத்திலேயே நாட்களை நகர்த்துவதோடு அடிப்படை வசதிகள் கூட இல்லாத லயன் அறைகளில் காணி உரிமையும் மறுக்கப்பட்டு மிக மோசமான சுகாதார மற்றும் சமூக பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழ்வதோடு இன்றைய 21ம் நூற்றாண்டிலும் இந்நிலமை முழுமையாக மாறவில்லை. (மூக்கையா, 1995)


மலைநாட்டில் நகர்புறத்தில் வறுமையில் வாழும் மக்களின் சதவீதம் 1.3% ஆகவும் கிராம புறத்தில் 3.3% ஆகவும் காணப்படுவதுடன் தோட்டப்புறங்களில் 6.8% என்ற அதி கூடிய வறுமை விகிதமே காணப்பட்டது. (மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கை, 2016) இதனடிப்படையில் மலையகத்தில் பல தோட்ட புறங்களில் வாழும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் தொழிலுக்கு ஏற்ற ஊதியம் இன்மையினால் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடல், அடிப்படை வசதிகள் அற்ற லயன் குடியிருப்புகள், முறையற்ற சுகாதார சேவைகள், கல்வி

நிலையில் பின்தங்கிய நிலை, சீரற்ற போக்குவரத்து சேவை, பொருட்களின் விலையேற்றம், நாடற்றவர் என்ற நிலை, காணி உரிமைச்சான்றிதழ் இன்மை, தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு உயர் கல்வி பெற முடியாத நிலை, என பல பிரச்சினைகளை இங்குள்ள மக்கள் எதிர்நோக்குகின்றனர். இவ்வாறு வரும் வழியும் வந்து குடியேறிய பின்னும் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்த தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் பதுளை மாவட்டத்திற்கு உட்பட்ட தோட்டப்புறங்களை மையப்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்படாமையினால் இதன் முக்கியத்துவம் கருதி தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பான முன்னைய ஆய்வுகளின் இடைவெளியை நிவர்த்தி செய்யும் முகமாக பதுளை மாவட்டத்திற்கு உட்பட்ட தோட்ட புறங்களில் தோட்ட தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதார பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதை பிரதான நோக்கமாகவும் தோட்டத்தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரச் சவால்கள் ஏற்படுவதற்கான காரணங்களை அடையாளம் காணல், தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரச் சவால்களை தீர்ப்பதற்கான வாய்ப்புக்களை இணங்காணுதல் மற்றும் தீர்வுகள், பரிந்துரைகளை முன்வைத்தல் போன்றவற்றை துணைநோக்கமாகவும் கொண்டே இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

## 1.1 ஆய்வுப்பிரதேசம்

இலங்கையின் ஊவா மாகாணத்தில் காணப்படும் இரு மாவட்டங்களில் பதுளை மாவட்டமும் ஒன்றாகும். இது மஹியங்கனை, ரிதிமாலியத்த, கந்தகெடிய, மீகஹாகிவுல்ல, சொரணாத்தோட்ட, பதுளை, பஸ்ஸர, லுணுகலை, ஹாலிஎல, எல்ல, பண்டாரவளை, வெலிமடை, ஊவா பரணகம, ஹபுதலை, ஹல்துமுல்லை ஆகிய 15 பிரதேச செயலகங்களை கொண்டுள்ளதுடன் 567 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. மேலும் இவ்வாய்வு பிரதேசத்தில் 1996 கிராம புறங்கள், 186 தோட்டப்புறங்கள் என்வபற்றுடன் 15 பிரதேச சபைகளும் 1 நகர சபையும் 2 நகராட்சி மன்றங்களும் காணப்படுகின்றன. மேலும் 2019ம் ஆண்டின் படி பதுளை மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 880310 ஆகும் (பதிவாளர் நாயகம் திணைக்களம், 2019).

**ஆய்வு பிரதேசம்**




மூலம் : ஆய்வாளனால் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வின் பிரதான நோக்கமாக பதுளை மாவட்டத்திற்கு உட்பட்ட தோட்டப்புறங்களில் வாழும் தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரச் சவால்களை அடையாளங்காணலும் துணை நோக்கங்களாக தோட்டத்தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரச் சவால்கள் ஏற்படுவதற்கான காரணங்களை அடையாளம் காணல், தோட்டத்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் வாழ்வாதாரச் சவால்களை தீர்ப்பதற்கான

வாய்ப்புகக்ளை இணங்காணுதல் மற்றும் தீர்வுகள், பரிந்துரைகளை முன்வைத்தல் என்பன காணப்படுகின்றன.

### 1.3 முன்னைய ஆய்வுகளின் வெளியீடு

மூக்கையா, மா. சே.,(1995) ''இன்றைய மலையகம்'' என்னும் கட்டுரைத்தொகுப்பில் மலையக மக்களின் வரலாறு, தோட்டத்தொழிலாளர்களின் வீடு, காணி, கல்வி, சுகாதார வசதிகள் போன்ற வாழ்வாதாரப்பிரச்சினைகள் மற்றும் அரசியல், பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் இவை சார்ந்த புள்ளிவிபரங்கள் ஆராயப்பட்டுள்ளன.

அருணாசலம், க.,(1997) ''இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்'' எனும் நூலில் ஒன்பதாம் இயல் - மலையகத்தமிழரியல் எனும் தலைப்பின் கீழ் மலையக தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் உருவாக்கம், மலையகத் தொழிலாளரின் புலம்பெயர்வு, அதற்கான காரணங்கள், அவர்களது வரலாறு, அரசியல் பொருளாதார நிலை மற்றும் அவை தொடர்பான பிரச்சினைகள் போன்ற தலைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் பற்றிய விடயங்கள் என்பன இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ளன.

கலாநிதி ஸாதியா பௌசர், (2020) ''மலையகக் கவிதைகளில் பெண்களும் சிறுவர்களும்'' என்னும் நூலில் 1ம் மற்றும் 2ம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டு மலையகம் சார் கவிதைகளின் ஊடாக தோட்டத்தொழிலாளர் பற்றாக்குறையினால் நிர்வாகம் எதிர் நோக்கியுள்ள சவால்கள், சிறுவர் துஸ்பிரயோகம், பெண்கள் வெளிநாடு செல்வதால் ஏற்படும் விளைவுகள், ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்யும் மலையக பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள், கலாச்சார சீரழிவுகள் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் இவ்வாறான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன.

பேராசிரியர் க. அருணாசலம், (1994) ''மலையக தமிழ் இலக்கியம்'' என்னும் நூலில் மலையக தோட்டத் தொழிலாளர்களின் வரலாறு, இலங்கையை தவிர பிற நாடுகளில் குடியேறிய தமிழ் தொழிலாளர்களின் இன்றைய நிலை, மலையக பெண் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள், நாடற்றவர்களாக மீண்டும் தேசம் திரும்பியவர்களின் நிலை, தோட்டத் தொழிலாளர்களின் அவலங்கள் போன்ற பல விடயங்கள் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன.

## 2. ஆய்வு முறையியல்

இவ்வாய்வுக்காக முதலாம் நிலை தரவுகளான கள ஆய்வு, நேர்முகம் காணல், நேரடி அவதானம், வினாக்கொத்து என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இங்கு 186 தோட்டப்புறங்கள் காணப்படுவதனால் ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்ளும் முகமாக நோக்க மாதிரி எடுப்பு முறையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட தோட்டப்புறங்களை மையப்படுத்தியதாக 100 கட்டமைக்கப்பட்ட வினா கொத்துக்கள் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன. மேலும் இரண்டாம் நிலை தரவுகளான பிரதேச செயலக பிரிவின் அறிக்கைகள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள், ஆய்வு கட்டுரைகள், பத்திரிகைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1 தரவு சேகரிப்பு முறைகள்

ஒரு ஆய்வின் வெற்றியானது சேகரிக்கப்படும் தரவிலும், அதன் நம்பகத்தன்மையிலும் தங்கியுள்ளது. சேகரிக்கப்படும் தரவுகள் செம்மையானதாகவும், நேர்மையானதாகவும் இருக்கும் போது ஆய்வின் முடிவு உண்மையானதாகவும், நம்பகத்தன்மையானதாகவும் காணப்படும். அந்த வகையில் இவ் ஆய்வுக்கு தேவையான தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களில் இருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளைப் பெற்றுக்கொள்ள வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானம் மற்றும் கலந்துரையாடல்கள் போன்ற முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பதுளை மாவட்ட தோட்டத் தொழிலாளர்கள் எதிர் நோக்கும் வாழ்வாதார

பிரச்சினைகள் என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட தோட்டப்பறங்களுக்கு 100 கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மாதிரிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவுகள்

1. வெளியிடப்பட்ட, வெளியிடப்படாத ஆய்வுகள்
2. ஆய்வுக் கட்டுரைகள்
3. இணையத்தள தரவுகள்
4. புத்தகங்கள், சஞ்சிகைகள்
5. பத்திரிகைகள், ஆண்டறிக்கைகள், போன்றவற்றைப் பயன்படுத்தியும் ஆய்விற்கு தேவையான தரவுகள் பெறப்பட்டுள்ளன.

### 2.2 தரவு பகுப்பாய்வு


சேகரிக்கப்பட்ட தரவுகளில் பண்பு சார் தரவுகள் விவரண அடிப்படையிலும், அளவுசார் தரவுகள் எளிய புள்ளிவிபரவியல் முறையிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அவசியமான சந்தர்ப்பங்களில் அட்டவணைகள், வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்கள் மூலமாக இவ்வாய்வானது விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தரவுகள் பகுப்பாய்விற்காக MS Excel, Google Earth Pro, மற்றும் Arc GIS (10.8) போன்ற மென்பொருட்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 3. பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

பதுளை மாவட்ட தோட்டப்புறங்களில் மக்களின் பிரதான பொருளாதார நடவடிக்கைகளாக தேயிலை பறித்தல், பயிர்ச்செய்கை நடவடிக்கைகள், கால்நடை வளர்ப்பு, வீட்டுத்தோட்டம் என்பன காணப்படுவதுடன் தேயிலை பறித்தலே பிரதான வாழ்வாதார மூலாதாரமாகவும் காணப்படுகின்றது. இதனடிப்படையில் தேயிலை பறித்தலை பிரதான ஜீவனோபாயமாக கொண்ட தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகள், அவை ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் அவற்றினை தீர்ப்பதற்கான பரிந்துறைகள் என்பன இவ்வாய்வில் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளன.

### 3.1 பதுளை மாவட்ட பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதார பிரச்சினைகள்

மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் வீட்டு வசதியும் ஒன்றாகும். இதனடிப்படையில் பதுளை மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 19% ஆக காணப்படும் தோட்டப்புற மக்களில் அதிகமானோர் வசிப்பதற்கு அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட 18 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட நெரிசல் மிகுந்த லயன் அறைகளிலேயே ஒன்றரை தசாப்தங்களை கடந்து கொண்டிருக்கின்றனர்.




Badulla District Secretariat Annual Performance Report - 2020

லயன் வீடுகளில் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்த லயன் வீடமைப்பு மற்றும் சமையல் கட்டுடனான ஒற்றை விட்டு லயன் வீடுகள் என இருவகை காணப்படுகின்றது. இது 18×18 சதுர அடி இடப்பிரச்சனையை கொண்ட வாழ்விடங்கள் ஆகும். இந்தக் குடியிருப்பில் தான் சராசரியாக 5 அங்கத்தவர்களைக் கொண்ட தொழிலாளர் குடும்பம் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பதுளை மாவட்டத்தின் கட்டிட அலகுகளின் மொத்த தொகை 236,054 காணப்படுதுடன் இவற்றில் 10.9% லயன் வீடுகளாகவே காணப்படுகின்றன.


குறைந்த அளவான மலசல கூட வசதிகளை கொண்டதும் ஒரு சில குழாய் நீர் விநியோகம் மற்றும் காற்றோட்ட வசதியின்மை, கழிவு நீர் அகற்றும் வசதிகள் இன்மை போன்ற பல குறைபாடுகளைக் கொண்ட இத்தகைய வீடுகளை அமைக்க கூடாது என இலங்கை



அரசாங்கம் 1950 ஆம் ஆண்டுகளிலேயே சட்டங்களை இயற்றியது. இருந்தபோதிலும் 40 ஆண்டுகளின் பின்னரும் இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலும் இந் நிலைமையிலான வீடமைப்பு முழுமையாக மாறவில்லை என்பது கசப்பான உண்மையாகும். இவ்வாறு பதுளை மாவட்டத்திற்கு உட்பட்ட பல தோட்டப்புறங்களிலும் இந்நிலை இன்றளவும் காணக்கூடியதாக உள்ளது. பெருந்தோட்டங்களின் 80% வீடுகள் லயன் வீடுகளாக காணப்படுகின்ற நிலையில் இப்பிரதேசத் தோட்டபுறங்களிலும் 80 சதவீதமான வீடுகள் லயன் குடியிருப்புகள் ஆகவே காணப்படுகின்றன. இவ்வாறு இப்பிரதேசத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை தரத்தினை குறிப்பிட்ட அளவிலாவது உயர்த்த வேண்டுமானால் அடுத்து வரும் குறுகிய காலப்பகுதிக்குள் பெருமளவு வீடுகள் கட்டப்பட வேண்டியதுடன் தற்போது பயன்படுத்தப்படுகின்ற வீடுகள் திருத்தப்பட்டு தரம் உயர்த்தப்பட வேண்டும்.

### 3.2 உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் இன்மை

1927 ஆம் ஆண்டு இந்திய அரசினால் தோட்டத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச வேதனை சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி தொழிலாளர்களின் வேதனம் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்கள் இடமே கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இருந்த போதும் 1930 களில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை காரணமாக தொழிலாளர்களின் வேதனங்கள் குறைக்கப்பட்டன. தொழிலாளர்களின் சம்பளமானது அவர்கள் வேலை செய்யும் நாட்களின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டதுடன் இதனோடு மேலதிக வாழ்க்கை செலவின் பாதிப்புகளை சமப்படுத்த அடிப்படை சம்பளத்துடன் சில மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் பெருந்தோட்டங்கள் தேசிய மயமாக்கப்படுவதற்கு முன்னர் 40 முதல் 50 சதவீதம் வரையிலான தோட்டங்களில் கிழமையில் மூன்று நாட்கள் வேலையே தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது என்றும் 40 விகிதமான தோட்டங்களில் கிழமைக்கு நான்கு நாள் வேலையும் பத்து விதமான தோட்டங்களில் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டநாட்களிலும் வேலை வழங்கப்பட்டது.




எவ்வாறாயினும் தற்பொழுது பதுளை மாவட்ட தோட்டப்புறங்கள் உட்பட தோட்டத்தொழிலாளர்களுக்கு இலங்கை ரூபாய் படி சராசரியாக நாள் ஒன்றுக்கு 500 ரூபாய் வழங்கப்படுகின்றது. இத்தொகை மிகவும் குறைவு என்பதால் தோட்டத் தொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதில் பெரிதும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர்.

*ISBN: 978-955-627-013-6*


தற்பொழுது காணப்படும் பாரிய பொருளாதாரம் நெருக்கடியினால் ஒவ்வொரு முறை கூட்டு ஒப்பந்தம் கையெழுத்திடும் காலம் வரும்போது தோட்டத் தொழிலாளர்கள் நியாயமான சம்பளம் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். ஏற்கனவே பாரிய பொருளாதாரம் பின்னடைவில் வாழும் பதுளை மாவட்ட தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரமானது கொரோனா தொற்றின் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பொருட்களின் விலை ஏற்றத்தின் பின் படு மோசமான நிலையில் காணப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இவ்வாறான ஒரு பின்னணியில் தோட்டத் தொழிலாளர்கள் நியாயமான சம்பளமாக ஆயிரம் ரூபாய் சம்பளம் கோரி தொழிற்சங்க போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இப்ப போராட்டங்களின் விளைவாக ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்க முதலாளிமார் சம்மேளனம் இணக்கம் தெரிவித்திருந்தாலும் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாட்களை இவர்கள் குறைத்துள்ளனர். மேலும் 75% வேலை நாட்கள் சமூகமளித்தால் மாத்திரமே ஊக்குவிப்பு கொடுப்பனவு கிடைக்கும் அதற்கு குறைவான நாட்கள் வேலை செய்திருந்தால் அதனைப் பெற முடியாத நிலையே காணப்படுகின்றது. இதனால் பெரும்பாலான தோட்டப்புறங்களில் இன்றும் ஆயிரம் ரூபாய் சம்பளம் முழுமையாக தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படாததனால் இவர்கள் பாரிய பொருளாதாரம் பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் உள்ளனர்.

| ஆண்டு | பணம் (ரூபாய்) |
|---|---|
| 1994 | 83 |
| 1998 | 95 |
| 2001 | 116 |
| 2004 | 185 |
| 2007 | 290 |
| 2009 | 405 |
| 2011 | 515 |
| 2013 | 620 |
| 2016 | 720 |
| 2021 | 1000 |

**1994 முதல் 2021 வரையிலான CA கூட்டங்களின் போது ஒப்புக்கொள்ளப்பட்ட தினசரி ஊதிய விகிதங்கள்**

இதனடிப்படையில் பதுளை மாவட்டத்தில் நகர்ப்புற துறையில் மாதாந்த வருமானம் அதிகமாகவும் தோட்டதுறையில் மாத வருமானம் குறைந்தளவிலும் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

### 3.3 முறையற்ற சுகாதார வசதிகள்





பெருந்தோட்ட மக்களின் வறுமை நிலையினை எடுத்துக்காட்டும் முக்கிய குறிகாட்டியாக முறையற்ற சுகாதார வசதிகள் காணப்படுகின்றது. பெருந்தோட்டங்களில் 150 ஆண்டுகளாக வாழ்கின்ற மக்களின் ஆரோக்கிய நிலைமைகள் மற்றும் சுகாதார வசதிகளானது இன்றளவும் தாழ்ந்த நிலைகளிலேயே இருந்து வருகின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற குறைந்த அளவான ஊதியத்தினால் அவர்கள் சிறந்த உடல் நலத்தை பேணுவது பெரும் சவாலாகவே காணப்படுகின்றது. இவ்வாறு வீழ்ச்சி அடைந்த தொழிலாளர்களின் வருமானத்தினால் ஏற்கனவே வறுமையில் வாழ்கின்ற தொழிலாளர்கள் உடல் வளர்ச்சியிலும் உள வளர்ச்சியிலும் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர். இதனடிப்படையில் பதுளை மாவட்டத்து தோட்டப்புறங்களில் 5 வயதிலும் குறைந்த பிள்ளைகளின் நிறை குறைவின்

அடிப்படையில் நகர்புறத்தில் 16.4%, கிராம புறத்தில் 20.8% காணப்படுவதுடன் தோட்டப்புறங்களிலேயே 29.7% என்ற அதிகரித்த விகிதம் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

தொழிலாளர்களின் ஆரோக்கியமான சுகாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கு தடையாக இருக்கும் முக்கிய காரணிகளாக வறுமை, அவர்கள் கல்வியில் பின் தங்கியவர்களாக இருப்பதை குறிப்பிடலாம். மேலும் இவர்களின் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கு தகுதி வாய்ந்த பயிற்சி மிக்க ஊழியர்களின் பற்றாக்குறையும் ஒரு காரணியாக அமைகின்றது. இன்றும் கூட பதுளை மாவட்டத்தின் பெருந்தோட்டங்களில் உள்ள மருத்துவமனைகள் மருந்து கொடுக்கும் இடங்கள் மகப்பேற்று நிலையங்கள் என்பவற்றில் போதிய பயிற்சி அற்ற ஊழியர்களே பணிபுரிகின்றனர். மேலும் தற்பொழுது பதுளை மாவட்டம் உட்பட மலையகப் பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் அதிக அளவில் குளவி கொட்டுக்கு இலக்காகுதல், சிறுத்தை புலிகளின் தாக்குதல், பாம்பு கடித்தல் என பல சுகாதார இடர்களையும் எதிர் நோக்குகின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் இவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கும் தேவையான அவசர சிகிச்சைகளை வழங்குவதற்கும் முறையான வைத்தியசாலையும் சிகிச்சை முறைகளும் கூட இல்லாத நிலையில் காணப்படும் தோட்டப்புறங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. இதனால் எவ்வளவு பெரிய உயிர் ஆபத்து ஏற்பட்டாலும் நகர்ப்புறங்களில் காணப்படும் வைத்தியசாலைகளுக்கே கொண்டு செல்லக்கூடிய இக்கட்டான சூழ்நிலையிலேயே தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கின்றனர். மேலும் பதுளை மாவட்டத்தின் பெரும்பாலான தோட்டப்புறங்களில் காணப்படும் வைத்தியசாலைகளானது பல வருட காலமாக எந்த விதமான புணர் நிர்மாணத்திற்கும் உள்ளாகாமல் புணர் நிர்மாணமும் இல்லாத நிலையில் பாழடைந்து காணப்படும் அவலமும் இன்றும் காணப்படுகின்றது.

மேலும் குளிர் மற்றும் ஈரக்கால நிலையினால் நாள் முழுவதும் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் தடிமன் இருமல் ஆகிய நோய்களுக்கும் உள்ளாகின்றனர். மேலும் இரும்புச்சத்துக் குறைபாடு, இரத்த அழுத்தம், பெருவிரல் ஆள்காட்டி விரல்கள் புண்ணாகுதல், தோள்பட்டை முதுகெலும்பு வலி, காலில் ஆணி ஏற்படல், இரத்த சோகை போன்ற பல்வேறு விதமான சுகாதார இடங்களுக்கும் ஆளாகின்றனர். மேலும் லயன் குடியிருப்புகளில் குறைந்த அளவான மலசல கூட வசதிகளை காணப்படுகின்றன. இவ்வாறு முறையற்ற மலசலம் கூட பாவனை மற்றும் லயன் குடியிருப்புகளில் காண் என அழைக்கப்படும் வடிகால் அமைப்பு போன்றவற்றின் காரணமாக மேலும் பல சுகாதார இடர்களை எதிர் நோக்குகின்றனர். இவ்வாறு பல்வேறு சுகாதார இடங்களுக்கு முகம் கொடுக்கும் இத்தொழிலாளர்கள் அவற்றிற்கான மருத்துவ செலவினங்களை மேற்கொள்வதற்கு கூட தயங்கிய நிலையில் செயல்படுவதாகவே இவர்களின் வருமானம் அமைந்துள்ளது.

## 3.4 தோட்டத் தொழிலாளர்களின் காணிப் பிரச்சினை





Source : Department of Census and Statistics/SoSLC

இலங்கையில் பதுளை மாவட்டத்தின் பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் முக்கியமான மானிட சவாலாக காணி பிரச்சனைகள் காணப்படுகின்றன. மலையகத் தோட்ட தொழிலாளர்கள் இலங்கை பிரஜைகளாக இருந்தாலும் இதுவரைக்கும் ஏனைய சமூகங்களை போல் நமது நாட்டில் கிராமங்களோ அல்லது தமக்கென்று உரித்தான வீடோ காணியோ இல்லாமல் தோட்ட லயன் அறைகளிலேயே பரம்பரையாக தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இதனால் இவர்களுக்கு தொழில் செய்யும் தோட்டமும் அதாவது வேலை தளமும் ஒரே இடமாகவே காணப்படுகின்றது. மேலும் பதுளை மாவட்ட காணிகளில் பெரும்பாலானவை தனியார்த்துறைக்கு சொந்தமானதாக காணப்படுகின்றமையினால் தோட்டப்புற மக்களுக்கு சொந்தமான காணி உரிமையும் வழங்கப்படாத நிலையும் காணப்படுகின்றது. இவர்களுக்கு தோட்டத்தை விட்டு வெளியில் செல்லாமல் இருக்க வழிபாட்டுத்தலம், பாடசாலை, வைத்தியசாலை, பிள்ளை பராமரிப்பு நிலையம், சலவை சலூன் வசதிகள், தபால் விநியோகம், பிறப்பு இறப்பு பதிவுகள் போன்றவைகளும் தோட்டங்களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதனடிப்படையில் பதுளை மாவட்டத்தில் தற்போது தோட்ட மக்கள் குடியிருப்புகளுக்கும் காணிகளுக்கும் பெறும் பாதிப்புகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பசரை கோணகலை தோட்டத்தில் மிக நீண்ட காலமாக 3

குடும்பங்கள் குடியிருக்கும் காணிகளில் அரச அலுவலகம் நிர்மானிக்க தேவையென பசரை பிரதேச செயலாளரினால் கேட்கப்பட்டுள்ளதுடன் அக்காணி அரசாங்கத்திற்கு உரியது என்று அறிவித்தல்கள் வீடுகளிலும் ஏனைய இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. இதே தோட்ட கீழ்ப்பிரிவில் பல தொழிலாளர் குடும்பங்கள் நீண்ட காலமாக வசிக்கும் குடியிருப்புகளுக்கும் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

மேலும் பதுளை மாவட்டத்தின் தெமோதர தோட்டத்தில் பாதை ஒன்று அமைக்க தொழிலாளர் குடியிருக்கும் லயத்தை இடிக்க எல்ல பிரதேச செயலாளரால் பண்டாரவளை நீதிமன்றத்தில் வழக்கத்தாக்குதல் செய்யப்பட்டுள்ளது. தனியாருக்கு உரித்தான காணியிலோ அல்லது வீட்டிலும் பத்து வருடங்கள் குடியிருந்தால் குறித்த நபருக்கு அந்தக் காணியோ அல்லது வீடோ உரித்தாக கூடிய சட்ட பொறிமுறைகள் உள்ளன. 2015 நடைபெற்ற பொது தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பிரச்சாரக் கூட்டங்களில் ரணில் விக்ரமசிங்க பத்து வருடங்கள் குடியிருப்பவர்களுக்கு அந்த வீடு உரித்தாக்கப்படும் என தெரிவித்த போதும் அக்கட்சியின் நல்லாட்சி அரசாங்கத்தில் இவ்விடயம் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்திய அரசாங்கத்தினால் 14 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ள போதிலும் பெருந்தோட்ட நிறுவனங்கள் அந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகளை பிரித்து வழங்க வெளிப்படையாகவே தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் வேலை திட்டமும் தாமதமடைந்து வருகின்றது.

### 3.5 புதிய சந்தைப்படுத்தக்கூடிய விவசாய பொருட்களை பயிரிடுதல்.





Source : Department of Census and Statistics/SoSLC

பதுளை மாவட்ட பெருந்தோட்டங்களில் வாழ்கின்ற தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் தமது பிரதான ஜீவனோபாயமாக கொழுந்து பறித்தலை மேற்கொள்கின்றனர். 150 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் இப் பயிர் செய்கையானது அண்மை காலங்களில் சற்று தளம்பல் போக்கினை அடைந்துள்ளது. பெருந்தோட்ட கம்பனிகளிடமிருந்து தனியார் நிறுவனங்கள் தேயிலை தோட்டங்களை குத்தகைக்கு பெற்று அவற்றில் வேறு விதமான சந்தைப்படுத்தல் பொருட்களை உற்பத்தி செய்து லாபம் அடைகின்றன. மேலும் இவ்வாறு தேயிலைக்கு பதிலாக பதுளை மாவட்டத்தின் மல்வத்தை வெளி பிளான்டேசன் சார்ந்த தோட்டப்புறங்களில் பயிரிடப்படும் மா, தோடம்பழம், யானை கொய்யா போன்ற பயிர்களினை உற்பத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்கும் வெளித்தோட்டங்களில் இருந்து மக்கள் வரவழைக்கப்படுகின்றனர். குறிப்பாக ஆண் தொழிலாளர்கள் வரவழைக்கப்படுவதனால் கொழுந்து பறித்தலை பிரதான ஜீவனோபயமாகக் கொண்ட பெண் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதன் காரணமாக குறித்த தேயிலை தோட்டத்தினை நம்பி வாழ்கின்ற தொழிலாளர்கள் பொருளாதார ரீதியாக பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவ்வாறான ஏனைய பயிர் செய்கைகளின் காரணமாக இவர்கள் தேயிலைத் தோட்டங்களில் தொழில் புரியும் வேலை நாட்கள் குறைக்கப்படுவதோடு மாதாந்த வருமானமும் பெரிதும் வீழ்ச்சி அடைகின்றது. இதனால் இவர்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்வதானது பாரிய சவாலாகவே காணப்படுகின்றது. மேலும் இவ்வாறான பிரச்சினைகளினால் கூடிய வருமானத்தை பெரும் நோக்கிலும் தமக்கென்ற ஒரு தொழில் நிமித்தமும் மக்கள் வெளி மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர். இவர்களில் 30 – 59 வயதிற்கு உட்பட்ட பெண் தொழிலாளர்களின் இடப்பெயர்வு அதிகளவி காணப்படுகின்றது. குறிப்பாக இவர்கள் நகர்ப்புற பகுதிகளில்

கடைகளிலும் ஆடைத்தொழிற்சாலைகளிலும் வீட்டுப்பணிப்பெண்களாகவும் தொழில் புரிகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவர்கள் பாலியல் வன்முறைகளுக்கும் உட்படுத்தப்படுவதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது.


### 3.6 தோட்டப்புறங்கள் காடுகளாக மாற்றமடைதல்.




Source : Department of Census and Statistics/SoSLC

ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பு காடு மேடாகவும் கல்லும் முள்ளாகவும் காட்சியளித்த மலை நாட்டை தோட்ட தொழிலாளர்கள் கடின உழைப்பால் எழில் கொஞ்சும் பூமியாக மாற்றியதோடு இலங்கையின் பொருளாதாரத்தையும் தோலில் சுமந்தனர். ஆனால் தற்பொழுது அவ்வாறான தேயிலை தோட்டங்கள் காடுகளாக மாற்றமடைந்து வருவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது. குறிப்பாக பதுளை மாவட்டத்தின் தோட்டப்புறங்களில் காணப்படும் முறையற்ற சுகாதார வசதிகள், லயன் குடியிருப்புகள், குறைந்த வருமானம் நவீன தொடர்பாடல்களின் தேடல், அதிக வருமானத்தை பெறும் தொழில்கள் போன்ற பல காரணங்களினால் தோட்டப்புற தொழிலாளர்கள் கொழும்பு, கம்பஹா போன்ற வெளிநகரப் பிரதேசங்களை நோக்கி இடம் பெயர்கின்றனர். இதன் காரணமாக குறித்த தேயிலைத் தோட்டங்களில் தொழில் புரிவதற்கான தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைவடைவதோடு காலப்போக்கில் தேயிலைத் தோட்டங்கள் முறையான பராமரிப்பு இன்றி காடு மேடுகளாக காட்சியளிப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையினால் இம்மாவட்டத்தில் தேயிலையினை மாத்திரம் நம்பி வாழும் தோட்டத் தொழிலாளர்கள் பாரிய வாழ்வாதார பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

### 3.7 குறைந்த வருமானத்தினால் பிள்ளைகளின் கல்வி நிலை பாதிப்படைதல்




ஆய்வு பிரதேச மக்களின் கல்வி நிலை

பதுளை மாவட்டத்தின் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்த அளவான வருமானமானது அவர்களின் அன்றாட உணவுதேவையை கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையையே ஏற்படுத்தியுள்ளது. இதனால் தோட்டப்புற இளம் சந்ததியினர் இன்று

கல்வித்துறையில் பெரிதும் பின் தங்கியுள்ளதோடு தொழிலாளர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு உரிய கல்வியினை வழங்குவதற்கு பெரிதும் சிரமப்படுகின்றனர். இதன் காரணமாக இவர்கள் தங்களின் பிள்ளைகளின் கல்வியில் ஆர்வம் காட்டாது விட்டு விடுகின்றனர். ஆரம்பகாலத்தில் பிரஜா உரிமை இன்மை தொடர்பிலான பிரச்சினைகள் காணப்பட்டமையினால் உயர்கல்வி வாய்ப்பினை பயன்படுத்தவும் அந்த கல்வியின் மூலம் பெறப்படும் தொழில்களும் இல்லாமலேயே போயின. இதனடிப்படையில் பதுளை மாவட்டத்தில் நகர மற்றும் கிராமபுறங்களில் கல்வி நிலைகளை விட தோட்டபுறங்களின் கல்வி நிலை பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளமையை மேற்காட்டப்பட்ட தரவு மூலம் வெளிகாட்டப்படுகிறது. அத்தோடு தோட்டப்புறங்களில் காணப்படும் பாடசாலைகளானது தறம் குறைந்தவையாக காணப்படுவதுடன் ஆசிரியர்களின் பற்றாக்குறையையும் அதிக அளவில் கொண்டு காணப்படுகின்றன. ஊவா மாகாணத்தில் 198 பாடசாலைகள் இயங்கி வருகின்ற நிலையில் இவற்றில் 48000 மாணவர்களும் 2400 ஆசிரியர்களும் பங்களிகப்புச் செய்கின்றனர். 2007ம் ஆண்டு ஆசிரியர் நியமனத்தின் ஊடாக 510 ஆசிரியர்கள் பதுளை மாவட்டத்திற்கு நியமனம் பெற்ற போதும் இவர்களில் இன்னும் 27 பேருக்கு பல்வேறு காரணங்களினால் நியமனம் வழங்கப்படவில்லை. மேலும் பல வருடங்களாக ஆசிரிய இடமாற்றங்கள் இடம்பெறவில்லை. இதனால் ஒரு சில ஆசிரியர்கள் ஒரே பாடசாலையில் 15வருடங்களாக சேவையாற்றுவதால் அவர்களிடம் கல்வி நுட்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. இதுபோன்ற காரணங்களினால் மாணவர்களின் கல்வி மட்டம் பெரிதும் வீழ்ச்சி அடைந்துள்ளதோடு இவர்களின் கல்வி நிலையில் தாக்கத்தினை செலுத்தும் மற்றும் ஒரு காரணியாக வசதி குறைந்த நெருக்கடியான வீட்டு வசதியையும் குறிப்பிட முடியும். ஐந்து பேரைக் கொண்ட குடும்பம் ஒன்று ஒரே அறையில் வசிக்கும் போது பாடசாலை மாணவர்கள் தமது பாடங்களை தயார் செய்வதில் கூட பெரும் இன்னல்களை எதிர் நோக்குகின்றனர். மேலும் பெரும்பாலான தோட்டப்புறங்களில் மின்சார வசதி கூட இல்லாத நிலையே காணப்படுகின்றது. முறையான போக்குவரத்து வசதி இன்மை போன்ற காரணங்களினால் மாணவர்கள் கல்வியில் தங்கள் ஆர்வத்தினை குறைத்துள்ளனர். இதனால் மாணவர்கள் பல்வேறு தொழில்களிலும் மேலும் வேறு பல விவசாய நடவடிக்கைகளிலும் தமது கவனத்தை திசை திருப்புகின்றனர். இதனால் சிறுவர் தொழிலாளர்களின் உருவாக்கம், பாடசாலை மாணவர்களின் இடைவிலகல், பல்கலைக்கழகத் தெரிவில் பாரிய வீழ்ச்சி போன்ற பல்வேறு பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர்.

## 4. முடிவுரை

ஆய்வின் பெறுபேறுகளுக்கு அமைய பதுளை மாவட்டத்தின் பெருந்தோட்ட தொழிலாளர்கள் எநிர்நோக்கும் பிரச்சிகைள் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இத்தோட்டப்புற மக்கள் எதிர்நோக்கும் சம்பளப்பிரச்சினை, காணி உரிமை பிரச்சினை, சுகாதார சீர்கேடுகள், குறைந்த கல்வி வசதி, குடியிருப்புசார் பிரச்சினைகள் போன்ற பல பிரச்சினைகளானது மலையக அரசியல் வாதிகளின் முறையான அபிவிருத்தி செயற்காடுகளின் மூலமே தீர்க்கப்பட வேண்டும். மேலும் இப்பிரச்சினைகளுக்கு அடிப்படை காரணமாக வறுமை நிலை, போதிய கல்வி அறிவு இன்மை, விழிப்புணர்வு இன்மை, அரசியல் உட்பூசல்கள், சம வாய்ப்புகள் வழங்கப்படாமை, சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள், வர்க்க வேறுபாடுகள் மற்றும் அரசியல் தலைமைகளின் கவனயீனம், சமூக புறக்கணிப்பு போன்றன காணப்படுகின்றன. எனவே அரச அபிவிருத்தி செயற்பாடுகளுடன் இணைந்து மக்கள் தாமாகவே தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் மாத்திரமே சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளுடனான ஒரு மலையக சமூகத்தை உருவாக்க முடியும். இதற்காக ஒவ்வொரு தோட்ட தொழிலாளரும் அரசுடனும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுதல் மற்றும் சரியான சந்தர்ப்பங்களில் சரியான தீர்மானங்களை எடுப்பதுடன் வாய்ப்புக்களை முறையாக பயன்படுத்ததல் போன்றன இன்றியமையாததாக காணப்படுகின்றன.

## 5.விதந்துரைகள்

- தோட்டப் புற மக்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு வழியுறுத்தும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- தோட்ட வாழ்மக்களின் யதார்த்த நிலமைகளை ஊடகத்திற்கு தெரியப்படுத்துவதன் மூலம் இப் பிரச்சினையை நாடளாவிய ரீதியில் தீர்வு காண்பதற்கான உத்திகளை கையாளல்.
- கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய சேவை வசதிகளை தோட்டப்புறங்களில் அபிவிருத்தி செய்வதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நாட்டில் மேற்கொள்ளல்.
- மலையக மக்கள் தமது தேவைகள் கருதி அதனைப் பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு போராட்டங்களில் ஈடுபடுவதனால் ஏனைய மக்களுக்கு அவர்களது நிலை புரிந்து அவர்களும் சில தீர்வுகளை முன்வைக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.

  மலையக மண்ணின் அதிகாரிகளின் பொறுப்புக்கள் சட்ட முறையில் நிறைவேற்றப்படுகின்றதா என சட்ட மேலதிகாரிகளால் கண்காணிக்கப்பட வேண்டும்.
- லயன் வீடுகளை சரி செய்து ஒரு சிறந்த வீடமைப்பு திட்டங்களை அமுல்படுத்திக் கொடுத்தல்.
- தோட்ட வேலைகள் மாத்திரமன்றி இன்னும் பல புதிய வேலைத் தொழில் வாய்ப்புக்களை அரசு இம்மக்களுக்குத் தயார்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- தோட்டப்புற எதிர்கால சந்ததியினரை இன்றில் இருந்தே சிறந்த வழிகாட்டலுடன் ஊக்கப்படுத்துவதனால் இன்றைய நிலையில் இருந்து வேறுபட்ட அபிவிருத்தி நிலையினை உருவாக்கலாம்.
- தோட்டப்புற இளைஞர்கள், கல்வி பயிலும் சிறுவர்கள் போன்றோரை பலம் வாய்ந்தவர்களாக மாற்றும் வெளிக்கள நடவடிக்கைகளை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு ஏற்படும் சவால்களுக்கு சிறந்த முறையில் தீர்வு காணக்கூடிய ஒரு கூட்டத்தினரைப் பெற்றுக் கொள்ளலாம்.
- இவ்வாறாக தோட்டப்புற மக்களின் அடிப்படை வசதிகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது.

## உசாத்துணைகள்

அருணாசலம், க., (2003). மலையகத் தமிழ் இலக்கியம், பேராதனை, இலங்கை.

கணேசமூர்த்தி, எம்., (2010). மலையக மக்களின் சமூகப் பொருளாதாரம். ஒரு வரலாற்றுப்பார்வை., மாணவர் பேரவை, தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

சாரல் நாடன், (2003), மலையகத் தமிழர் வரலாறு, கொட்டாங்கள, இலங்கை.

முருகன், பொ., (2018). தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் எதிர் கொள்ளும் சமூக பொருளாதார பிரச்சினைகள்: ஹயிற்றி கிராம சேவகர் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு, Research Repository, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

மூக்கையா, மா. சே., (1995). இன்றைய மலையகம், பி. ஆர். லித்தோகிராபர்ஸ், சென்னை – 600013.

ஹஸ்னா பானு, ரூ சாஹலீ ஹமீட், (2020). மண்சரிவு அனர்த்தமும் தோட்டத் தொழிலாளர்கள் எதிர் கொள்ளும் பொருளாதாரச் சவால்கள் : பம்பரகிரிஎல்ல கிராம சேவகர் பிரிவினை மையப்படுத்திய ஆய்வு, fiasym, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மலையகத்தமிழர்களின் இன்றைய நிலை. (2018.09.24). www.bbc.com/tamil/sri-lanka-45620953

தினகரன் வாரமஞ்சரி. (2022, மார்ச், 6). www.vaaramanjari.lk/2022/03.06/kiyafk.

லோரன்ஸ்,அ., 30.12.2014, மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளும் தேர்தலும், https://www.matram.com

புள்ளிவிபரவியல் அலகு, கல்வி அமைச்சு. (2007).

பதிவாளர்நாயகம் திணைக்களம். (2019).

மக்கள் தொகை கணக்கெடுப்பு. (2016).

மத்திய வங்கி வருடாந்த அறிக்கை. (2019). Badulla District Secretariat,Annual Performance Report. (2020).

Gunaseharam, D., Haleema, S.A., & Sahana, M.S.F., (2021). Socio-economic challenges: a case study based on Hydriestate people, Department of Geography, South Eastern University of SriLanka. https://www.researchgate.net.publication/350343428